4

086

# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை – 2018

| தரம் - 10 | தமிழ் இலக்கிய நயம் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **பகுதி – I இல் 1ம், 2ம் வினாக்களிற்கும் பகுதி – III இல் 3 ஆம் வினாக்களிற்கும் பகுதி – III இல் 4, 5, 6 7 ஆம் வினாக்களில் எவையேனும் இரண்டிற்குமாக ஐந்து வினாக்களிற்கு விடை அளிக்குக.**

01. எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

1) அ) பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
   ஆ) சையோகம் என்பதன் கருத்து யாது?

2) அ) கவிக்கோ அப்துல் ரவற்மானின் கவிதைப் படைப்புக்கள் எவை,
   ஆ) மென்மையே நீண்ட நாள் வாழும் எனக்கூறியவர் யார்?

3) அ) வாய்மொழிப்பாடல்கள் எவற்றைப் பாகுபொருளாகக் கொண்டுள்ளன?
   ஆ) மெருத்துவச்சிப்பாடலில் குழந்தை எப்பொருட்களோடு வந்ததாக மருத்துவிச்சி பாடுகின்றாள்?

4) அ) முளிதயிர் என்ற பாடலின் ஆசிரியர் யார்?
   ஆ) "விட்டுப்பிரிகையிற் சொட்டுக் கண்ணீர் பட்ட விண்ணின் அமுதமையா, இவ்வடியின் இலக்கியச் சிறப்பினை குறிப்பிடுக?

5) அ) கலிங்கம் என்பது யாது?
   ஆ) அமுதம் என்ற பாடலில் ஆசிரியரின் முதற் சிறுகதைத் தொகுப்பு யாது?

(5X4=20 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

❖ **எவையேனும் இரு வினாக்களிற்கு விடை தருக.**

6)

i) புத்தகசாலை என்னும் பாடத்தில் கவிஞர்காணவிழையும் நூலகம் எத்தகையது என்பதைத் தெளிவுபடுத்துக?

ii) மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி இவ்வடியின் இலக்கியச்சிறப்பினை விளக்குக?

7) மரங்களுடன் மனிதனை ஒப்பிடுமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக?

8) மருத்துவிச்சியின் மனப்பாங்கினையும், மருத்துவிச்சி குழந்தையை எவ்வாறு வாழ்த்துகின்றாள் என்பதையும் எடுத்துக்காட்டுக?

9) இனிது என என்ற பாடத்தில் முளிதயர் மிசைந்த காந்தன் மெல்வரில் என்ற பாடலின் ஊடாக தலைவனிடத்தில் தலைவி கொண்ட அன்பு எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றது.

01. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக?

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்த தொருவேளை தன்னில்
இனித்தபுவி இயற்கை எழில் எல்லாம் கண்டேன்
இசைக்கேட்டேன்! மணம்மோந்தேன் / சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்தது எனது நெங்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப் பெரிது கண்டீர்!

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப்போக்கி
சகமக்கள் ஒன்றென்பதுணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் என்ன மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

1) இப்பாடலில் கவிஞர் புத்தக வாசிப்பில் மூழ்கியபோது எவற்றைக் கண்டு கொண்டதாகக் கூறுகின்றார்?
2) மகாசோதி என்பதன் கருத்து யாது?
3) சனித்தது என்பதன் கருத்து யாது?
4) சுவடிச்சாலை என்பதன் கருத்து யாது?
5) நாட்டிலே ஏன் புத்தகசாலை வேண்டும் எனக் கூறுகின்றார்?

(5X5=25 புள்ளிகள்)

02. கீழ்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக?

நாட்டார் பாடல்களின் ஒரு பகுதியே மருத்துவிச்சிப்பாடல் என்பது வாய்மொழிப்பாடல்களின் ஒரு கிளையாகும். ஐவத்தியர்களும், வைத்தியசாலைகளும் செல்வாக்குப் பெற்றிராத கிராமங்களில் மருத்துவிச்சியே பிரசவச்சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளாள். தாயையும், குழந்தையையும் பாதுகாத்த அவளிற்கு அரிசி, நெல், மிளகு முதலான பொருட்கள் வழங்கப்படுவதுண்டு. பிரசவம் பார்த்த மருத்துவிச்சி கையில் குழந்தையைத்தூக்கியவாறு பாடப்படும் பாடலே இதுவாகும். நாட்டார் பாடல்கள் கூட்டு வாழ்வையும் அதன் இன்ப துன்பங்களையுமே பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

1) மருத்துவிச்சிப்பாடல் என்றால் என்ன?
2) மருத்துவிச்சியின் செல்வாக்கு எங்கு இடம்பெற்றது?
3) மருத்துவிச்சியின் யாரைப் பாதுகாத்தாள்?
4) மருத்துவிச்சிக்கு வழங்கப்படும் பொருட்கள் எவை?
5) நாட்டார் பாடல்கள் எவற்றைப் பாகுபொருளாகக் கொண்டுள்ளன?

(5X5=25 புள்ளிகள்)

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page